நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தென்னை சாகுபடியில் உர மேலாண்மை பயிற்சி**

First Published : 02 Jul 2011 11:58:43 AM IST

நாமக்கல், ஜூலை 1: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் தென்னை சாகுபடியில் உர மேலாண்மை மற்றும் பயிர் பாதுகாப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி வரும் 5-ம் தேதி நடைபெற உள்ளது.

இப் பயிற்சியில் தென்னையின் வயதுக்கேற்ப பரிந்துரை செய்யப்படும் உர அளவுகள், இடும் காலம், நுண்ணூட்ட உர மேலாண்மை, நீர் பாசன முறைகள், நுண்ணீர் பாசன முறைகள், ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம், ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை முறைகள், ஊடுபயிர் சாகுபடி முறைகள், தென்னை நாற்றாங்கால் அமைப்பதற்கான அரசு திட்டகள் குறித்து செயல்விளக்கம் அளிக்கப்படும்.

இதில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் ஆகியோர் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்படும் வேளாண் அறிவியல் நிலையத்தை அணுகலாம். மேலும், விவரங்களுக்கு 04286-266345, 266244, 266650 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**"கோழிகளுக்கு வெப்ப அயற்சி நோய் ஏற்படும் அபாயம்'**

First Published : 02 Jul 2011 11:56:52 AM IST

நாமக்கல், ஜூலை 1: கோழிகளுக்கு வெப்ப அயற்சி ஏற்பட்டு இறக்கும் அபாயம் நிலவுவதாக நாமக்கல் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக வானிலை ஆலோசனை மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அம் மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

அடுத்த நான்கு நாள்களுக்கான நாமக்கல் மாவட்ட வானிலையில் வானம் லேசான மேக மூட்டத்துடன் காணப்படும். ஆங்காங்கே மிதமான மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. பகல் வெப்பம் 36 டிகிரி செல்சியஸ்õகவும், இரவில் வெப்பநிலை 25 டிகிரி செல்சியஸ்õகவும் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. தென்மேற்கு பருவமழைக் காற்றின் வேகம் குறைந்து இருப்பதால் வெப்பத்தின் தாக்கம் அதிகமாக உணரப்படும்.

குறைவான மேகமூட்டமும், குறைந்த காற்றின் வேகமும் வெப்பத்தின் அளவை 37 டிகிரி செல்சிஸஸ்க உயர்த்த வாய்ப்புள்ளது.

இத்தகைய சீதோஷ்ணநிலை அடுத்து வரும் நாள்களில் நிலவும் என்பதால் கோழிகளிடையே வெப்ப அயற்சி ஏற்படும் இறக்கும் அபாயம் நிலவுகிறது.

இது தாற்காலிகமான வானிலை என்றாலும், அதன் பாதிப்பு உணரப்படும் அளவுக்கு இருக்கும்.

கடந்த வாரம் கோழியின நோய் பரிசோதனை மற்றும் கண்காணிப்பு ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்ட கோழிகள் பெரும்பாலும் வெப்பத் தாக்குதல் மற்றும் மேல்மூச்சுக் குழல் நோயால் இறந்து இருப்பது தெரியவந்தது. எனவே, பண்ணையாளர்கள் உரிய உயிர் பாதுகாப்பு மற்றும் கோடை வெப்பத்தை தணிப்பு முறைகளை கையாள வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

**கரும்புகளை விற்ற விவசாயிகள் பணம் கிடைக்காமல் அவதி**

நமது நிருபர்

First Published : 02 Jul 2011 03:49:46 PM IST

தஞ்சாவூர், ஜூலை 1: அரைவைப் பருவம் முடிந்தும், கொள்முதல் செய்யப்பட்ட கரும்புகளுக்கு இரு சர்க்கரை ஆலை நிர்வாகங்கள் இதுவரை பணம் பட்டுவாடா செய்யாமல் விவசாயிகளை அலைக்கழித்து வருகின்றன.

மத்திய அரசின் கரும்பு கட்டுப்பாட்டு ஆணையின்படி, வயலில் இருந்து ஆலைகளுக்கு கரும்பு அனுப்பியதிலிருந்து 15 நாள்களுக்குள் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுவிட வேண்டும். ஆனால், ஏப்ரல் 15-ம் தேதிக்கு பிறகு அரைவைக்கு எடுக்கப்பட்ட கரும்புகளுக்கு இதுவரை விவசாயிகளுக்கு பணம் தரப்படவில்லை. கரும்பு கொள்முதல் செய்து இரண்டு மாதங்களாகியும் விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யாத திருமண்டலக்குடி, துகிலி கோட்டூரிலுள்ள தனியார் சர்க்கரை ஆலைகளில் ஜூன் 20-ம் தேதியோடு அரைவைப் பருவமே முடிந்துவிட்டது.

இந்த இரண்டு ஆலைகளுக்கும் தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் கரும்பு சாகுபடி பரப்பளவு உள்ளது. அதனால், கரும்புக்கான கொள்முதல் பணம் கிடைக்காமல், இந்த மாவட்டங்களில் ஏராளமான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலமே சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்கு கரும்பு கொள்முதல் தொகையை பட்டுவாடா செய்கின்றன. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் அனைத்து கரும்பு விவசாயிகளும் ஏக்கருக்கு ரூ. 22,500 கடன் பெற்றுத்தான் சாகுபடி செய்துள்ளனர். இந்தக் கடன் தொகையை திரும்பச் செலுத்தாததால், விவசாயிகளுக்கு மீண்டும் கடன் தர இந்த வங்கிகள் மறுத்துவிட்டன. இதனால், பல விவசாயிகளின் வாழ்வாதாரமே கேள்விக்குறியாகி உள்ளது.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் கடன் பெற்ற விவசாயிகளுக்கு கரும்பு கொள்முதல் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டது. ஆனால், தேசியமயமாக்கப்பட்ட

வங்கிகளில் கடன் பெற்ற விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை. இங்குதான் 70 முதல் 75 சதம் விவசாயிகள் கடன் பெற்றுள்ளனர்.

இந்த ஆலைகளில் தினமும் 2,000 டன் வீதம் கடந்த இரண்டு மாதங்களில் 1.20 லட்சம் டன் கரும்பு அரைவை செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அரசின் ஆதார விலையான டன் ஒன்றுக்கு ரூ. 1900 கணக்கின்படி சுமார் ரூ. 20 கோடி வரை விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட வேண்டியுள்ளது.

காவிரி டெல்டா மாவட்டங்களில் கரும்பு விவசாயிகளின் கோரிக்கைகளை கேட்டு விவாதிக்க தனியாக குறைதீர் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்பதும் விவசாயிகளின் விருப்பமாக உள்ளது.

இதுதொடர்பாக தஞ்சை மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன் கூறியது: பணம் பட்டுவாடா செய்யாதது குறித்து விவசாயிகள் புகார் தெரிவித்தனர். உடனடியாக இரண்டு சர்க்கரை ஆலை நிர்வாகங்களிடமும் அறிக்கை அளிக்க உத்தரவிட்டுள்ளேன். ஜூன் 30-ம் தேதி பணம் பட்டுவாடா செய்வதாக ஆலைகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இனியும் தாமதிக்காமல் விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்ய ஆலைகளுக்கு மீண்டும் அறிவுறுத்தப்படும். கரும்பு விவசாயிகளுக்கு தனியாக குறைதீர் கூட்டம் நடத்துவது குறித்து ஆலோசித்து வருகிறோம் என்றார் பாஸ்கரன்.

**நெல் விலைவீழ்ச்சியை தடுக்க நேரடி கொள்முதல் நிலையங்களை அமைக்க வேண்டும்: எம்.ஆர். சிவசாமி கோரிக்கை**

First Published : 01 Jul 2011 04:10:55 PM IST

வேலூர், ஜூன் 30: நெல் விலை வீழ்ச்சியைத் தடுக்க தமிழகம் முழுதும் நேரடி கொள்முதல் நிலையங்களை அரசு அமைக்க வேண்டும் என தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநிலத் தலைவர் டாக்டர் எம்.ஆர். சிவசாமி கோரிக்கை விடுத்தார்.

வேலூரில் நிருபர்களிடம் அவர் வியாழக்கிழமை கூறியது:

வேலூர் மாவட்டம் உள்பட பெரும்பாலான மாவட்டங்களில் நெல் உற்பத்தி அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் விலை வீழ்ச்சியையும் சந்தித்து வருகிறது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாயிகள் நெல்லை நியாயமான விலைக்கு விற்பனை செய்ய இயலவில்லை. அரசு நெல் குவிண்டாலுக்கு ரூ.1,150 விலை நிர்ணயம் செய்துள்ளது.

ஆனால் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வியாபாரிகளும், அதிகாரிகளும் வைத்துள்ள உடன்பாட்டால் குவிண்டால் நெல்லுக்கு ரூ.750 மட்டுமே கிடைக்கிறது. இந்நிலையை தடுக்க அரசு உடனடியாக தஞ்சை மாவட்டத்தைப் போன்று, நேரடியாக தமிழகம் முழுதும் வட்டங்கள்

தோறும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டும். அப்போதுதான் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கும்.

வேலூர் மாவட்டத்தில் கலவை, மாம்பாக்கம் உள்ளிட்ட இடங்களில் கொள்முதல் நிலையங்களை தொடங்க வேண்டும். விவசாயிகள் உழவர் தினத்தையொட்டி ஜூலை 5-ம் தேதி வேலூரில் உழவர் தின பேரணியும், பொதுக் கூட்டமும் நடத்தப்படவுள்ளது. இதில் தமிழகம் முழுதும் இருந்து 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்கவுள்ளனர்.பேரணியில் கர்நாடக விவசாயிகள் சங்கத் தலைவர் கோடி நல்லி சந்திரசேகர், கேரள விவசாயிகள் சங்கத் தலைவர் ரவி ஆகியோர் பங்கேற்கின்றனர்.

கரும்பு டன்னுக்கு ரூ.3 ஆயிரமும், நெல் குவிண்டாலுக்கு ரூ.2 ஆயிரமும் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தை விவசாயத்துக்கு பயன்படுத்துதல், பயிர்சேதம் செய்யும் காட்டுப்பன்றிகளை அழிக்க அனுமதியளித்தல், யானைகள் விவசாய நிலங்களை பாழ்படுத்துவதை தடுத்துக்ஷ நிறுத்த நடவடிக்கை எடுத்தல் உள்ளிட்ட 20 அம்ச கோரிக்கைகள் இந்த பேரணியில் வலியுறுத்தப்படும்.

**பாலாற்றுப் பிரச்னை**

பாலாற்றுப் பிரச்னையில் இன்னும் போதுமான விழிப்புணர்வு ஏற்படவில்லை. எந்த போராட்டமும் மக்களின் பங்களிப்பு இல்லாவிடில் வெற்றி பெறாது. எனவே மக்களிடம் முதலில் விழிப்புணர்வு ஏற்படுத்தியாக வேண்டும் என்றார் சிவசாமி.

**திராட்சை சாகுபடி பரப்பை அதிகரிக்க ரூ.2 கோடி மானியம்**

First Published : 01 Jul 2011 01:33:35 PM IST

கம்பம், ஜூன் 30:÷கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் திராட்சை சாகுபடி பரப்பை அதிகரிக்க மத்திய தோட்டக் கலை இயக்ககத்தின் சார்பில் ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கம்பம் பள்ளத்தாக்கு, சுருளிப்பட்டி, கருநாக்கமுத்தன்பட்டி, குள்ளப்பகவுண்டன்பட்டி, நாராயணத்தேவன்பட்டி, காமயகவுண்டன்பட்டி, கூடலூர், கம்பம், ஓடைப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் 2 ஆயிரத்து 500 ஹெக்டேர் பரப்பளவில் திராட்சை சாகுபடி செய்யப்படுகிறது.

திராட்சை சாகுபடி பரப்பை அதிகரிக்க தமிழக அரசு, மத்திய தோட்டக் கலை வாரியம், மத்திய தோட்டக் கலை இயக்ககம் ஆகியவை ஏற்கெனவே விவசாயிகளுக்கு மானிய உதவிகள், நவீன தொழில்நுட்ப யோசனைகளை வழங்கி வருகின்றன.

இந்நிலையில், கம்பம் பள்ளத்தாக்கில் கூடுதலாக 450 ஹெக்டரில் திராட்சை சாகுபடி பரப்பை அதிகரிக்க மத்திய தோட்டக் கலைத் துறை இயக்ககத்தின் சார்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக ரூ.2 கோடியை மத்திய தோட்டக் கலை இயக்ககம் ஒதுக்கீடு செய்துள்ளது.

இதுகுறித்து தங்க.தமிழ்ச்செல்வன் எம்.எல்.ஏ. கூறியதாவது:÷திராட்சை சாகுபடி பரப்பை அதிகரிக்க மத்திய தோட்டக் கலை இயக்ககத்தின் சார்பில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை தமிழக அரசின் மூலம் கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் செலவுசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக புதிதாக திராட்சை பயிரிடும் 1 ஹெக்டருக்கு முதல் ஆண்டு ரூ.30 ஆயிரம், 2-வது ஆண்டு ரூ. 20 ஆயிரம் என மொத்தம் ரூ.50 ஆயிரம் வழங்க அனுமதி கிடைத்துள்ளது என்றார்.

கம்பம் தோட்டக் கலைத் துறை உதவி இயக்குநர் க.செந்தில்குமார் கூறியதாவது:÷இத்திட்டத்தில் சேர விரும்பும் விவசாயிகள், திராட்சை பயிரிடவுள்ள நிலத்தின் சிட்டா, அடங்கல், எப்.எம்.பி. கெட்ச் மேப் உள்ளிட்ட ஆவணங்களுடன் தோட்டக் கலை உதவி இயக்குநர், தோட்டக் கலை மாவட்ட துணை இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு, கூடுதல் விவரங்களை தெரிந்து கொள்ளலாம்

என்றார்.

தினமலர்

**மேட்டூர் அணை நீர்வரத்து 8,000 கனஅடியாக உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2011,01:39 IST

மேட்டூர்: மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று விநாடிக்கு, 8,000 கனஅடியாக அதிகரித்தது. மேட்டூர் அணை டெல்டா நீர்திறப்பு விநாடிக்கு, 20 ஆயிரம் கனஅடியாக உயர்ந்தது. காவிரி நீர்பிடிப்பு பகுதியில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்ததால் கர்நாடகாவில் உள்ள கபினி, கே.ஆர்.எஸ்., அணை நீர்வரத்து அதிகரித்தது. நேற்று முன்தினம் கபினி நிரம்பியதால் விநாடிக்கு, 9,000 கனஅடி நீர் காவிரியில் திறக்கப்பட்டது. இந்த நீர் நேற்று மேட்டூர் அணைக்கு வந்து சேர்ந்தது. அதனால், நேற்று முன்தினம் விநாடிக்கு, 3, 700 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று மாலை விநாடிக்கு, 8, 0 73 கனஅடியாக அதிகரித்தது. தமிழக டெல்டா மாவட்டங்களில் குறுவைக்கான நாற்று நடும் பணி துவங்கியதால் விநாடிக்கு, 18 ஆயிரம் கனஅடியாக இருந்த டெல்டா பாசன நீர்திறப்பு நேற்று மதியம், 12 மணி முதல் விநாடிக்கு, 20 ஆயிரம் கனஅடியாக உயர்த்தப்பட்டது. நேற்று மாலை அணை நீர்மட்டம், 97.880 அடியாகவும், நீர் இருப்பு, 62.089 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. கர்நாடகாவில் உள்ள காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பருவமழை தீவிரம் குறைந்ததால் நேற்று கபினி, கே.ஆர்.எஸ். நீர்வரத்து குறைந்தது. இந்நிலையில், கண்காணிப்பு பொறியாளர் கணேச மாரச்சன் நேற்று மேட்டூர் அணையை பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது மேட்டூர் அணை அதிகாரிகள் உடன் இருந்தனர்.

**உரக்கட்டுப்பாட்டு சட்டத்தை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை: உர ஆய்வாளர் எச்சரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2011,01:26 IST

பள்ளிபாளையம்: "உர விற்பனையாளர்கள், தரமான உரங்களையே கொள்முதல் செய்து இருப்பு வைத்து, உரிய விலைக்கு விற்பனை செய்ய வேண்டும். உரக்கட்டுப்பாட்டு சட்ட விதிமுறைகளை மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என, பள்ளிபாளையம் உர ஆய்வாளர் கவிதா தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: உர விற்பனை நிலையங்களில், உர விற்பனை உரிமத்தை பார்வையில் படும்படி வைக்க வேண்டும். உர உரிமத்தில் அனுமதிக்கப்பட்ட நிறுவனங்களின் உரங்களை மட்டுமே விவசாயிகளுக்கு விற்பனை செய்ய வேண்டும். உரங்களை விற்பனை செய்யும்போது, நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மட்டுமே விற்க வேண்டும். அதேபோல், விவசாயிகளுக்கு உரிய விலைக்கு பில் தரவேண்டும். எடை மேடை தராசு நல்ல நிலையில் புதுப்பித்திருக்க வேண்டும். சரியான எடைக்கு உரங்கள் விற்பனை செய்ய வேண்டும். உரங்கள் கொள்முதல் செய்ததற்கு உரிய "இன்வாய்ஸ்', உர இருப்பு பதிவேடு, பில் புத்தகம், "ஓ' படிவம் ஆகியவை ஆய்வுக்கு காண்பிக்க தயார் நிலையில் இருக்க வேண்டும். விவசாயிகள், தமது தேவைக்கு கேட்கும் உரங்களை மட்டுமே பில் செய்து சரியான முறையில் வழங்க வேண்டும். தரமற்ற, கலப்படமான உரங்களை இருப்பு வைக்கவோ, விற்கவோ கூடாது. மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயிகளுக்கு, பருவத்துக்கு தேவைப்படும் உரங்களை முன் கூட்டியே திட்டமிட்டு இருப்பு வைக்க வேண்டும். விலை பட்டியல் பலகை வைத்து, அதன் விபரத்தை எழுதி வைக்க வேண்டும். விவசாயிகள் பயன்பெறத்தக்க வகையில், வேளாண் துறை பரிந்துரைக்கும் தொழில் நுட்பச் செய்திகளை, தங்கள் விற்பனை நிலையங்களின் முன் விளம்பர பலகை வைத்து எழுதி வைக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**டன் ஒன்றுக்கு ரூ.2,500 அறிவிக்க வேண்டும் : கரும்பு விவசாயிகள் சங்கம் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2011,01:24 IST

மோகனூர்: "நடப்பு கரும்பு அரவை பருவத்தில், சர்க்கரை ஆலைக்கு சப்ளை செய்யும் கரும்பு டன் ஒன்றுக்கு, 2,500 ரூபாய் குறைந்த பட்ச வயல் விலையாக, தமிழக அரசு அறிவிக்க வேண்டும்' என, பேரவை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்க, 28வது ஆண்டு பேரவைக்கூட்டம் மோகனூரில் நடந்தது. சங்கத்தலைவர் கந்தசாமி தலைமை வகித்தார். நிர்வாகி எட்டிக்கண் வரவேற்றார். பொதுச் செயலாளர் வக்கீல் நடராஜன் ஆண்டறிக்கை வாசித்தார். பொருளாளர் வரதராஜன் வரவு,செலவு கணக்கை தாக்கல் செய்தார்.

உறுப்பினர்கள் ராமசாமி, சுப்புராஜ், நவலடி, அண்ணாதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில், நடப்பு, 2011-12ம் ஆண்டு அரவை பருவத்தில், சர்க்கரை ஆலைக்கு சப்ளை செய்யும் கரும்பு டன் ஒன்றுக்கு, குறைந்தபட்ச வயல் விலை, 2,500 ரூபாய் என, தமிழக அரசு விலை நிர்ணயம் செய்து அறிவிக்க வேண்டும். கரும்பு வெட்டுக்கூலி, வாகன வாடகை முழுவதையும், ஆலை நிர்வாகமே ஏற்றுக்கொள்ள அரசு ஆணையிட வேண்டும். கடந்த, 2001-02 முதல் 2010-11ம் ஆண்டு வரை, கரும்பு அரவை பருவத்தில் சர்க்கரை ஆலைக்கு சப்ளை செய்யப்பட்ட கரும்புக்கு கூடுதல் கரும்பு விலை கணக்கிட்டு, விவசாயிகளுக்கு விரைவில் பட்டுவாடா செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆலை அங்கத்தினர்கள் பங்கு மூலதனத்துக்கு "டிவிடெண்ட்' சட்டப்படி கணக்கிட்டு விரைவில் வழங்க, அரசு ஆணையிட வேண்டும். சர்க்கரை ஆலை நிர்வாகத்தின் கீழ் ஆலை மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, கடந்த, 1978ம் ஆண்டு முதல் தொடர்ந்து இயங்கி வந்தது. ஆனால், கடந்த, 2009ம் ஆண்டு முதல் "கோவை சுருதி சேவா டிரஸ்ட்' என்ற தனியாருக்கு ஆண்டுக்கு, 100 ரூபாய் மட்டும் ஆலைக்கு செலுத்திவிட்டு, பள்ளி நிர்வாகத்தை சுதந்திரமாக நடத்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆலை நிர்வாகத்துக்கும், மேற்படி தனியாருக்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தம், சர்க்கரை ஆலை உபவிதிகளுக்கும், சட்டத்துக்கும் எதிரானது. மேற்படி ஒப்பந்தத்தை உடனடியாக ரத்து செய்து, மீண்டும் ஆலை நிர்வாகத்தின் கீழ் பள்ளி இயங்க, தேவையான உத்தரவை ஆலை, சர்க்கரைத்துறை மற்றும் அரசும் பிறப்பிக்க வேண்டும். கடந்த, 2009ம் ஆண்டு செப்டம்பர் 5ம் ÷தி நடந்த ஆலை மகாசபை கூட்டம் சட்டப்படி செல்லாது என அறிவித்து, இந்த ஆண்டு, ஆலையின் மகாசபை கூட்டத்தை முறைப்படி நடத்தி, முறையாக தீர்மானம் நிறைவேற்ற ஆவண செய்ய வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. முன்னதாக, சங்கத் தலைவராக கந்தசாமி, பொதுச் செயலாளராக வக்கீல் நடராஜன், பொருளாளராக வரதராஜன் ஆகியோர் மீண்டும் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். மேலும், 15 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

**நீரை சிக்கனமாக பயன்படுத்த வேளாண் துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜுலை 02,2011,00:11 IST

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நடப்பு கார் பருவ நெல் சாகுபடியில், திருந்திய நெல் சாகுபடி முறையை செயல்படுத்தி, நீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம்' என, வேளாண் இணை இயக்குனர் ராஜன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், ஆண்டுக்கு, 27 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. நடப்பு கார் மற்றும் சம்பா பருவத்தில், 9,000 முதல் 10 ஆயிரம் ஹெக்டேரில

நெல் சாகுபடி எதிர்பார்க்கப்படுகிறது. முதல் போக நெல் சாகுபடிக்கு, கே.ஆர்.பி., அணையில் இருந்து வழக்கமாக தண்ணீர் திறந்து விடும் நாளில் இருந்து, 11 நாட்களுக்கு முன்பாக தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகள் முன்கூட்டியே நெல் நாற்று விட்டு நடவு செய்வதன் மூலம், நெல் அறுவடை முன்கூட்டியே வருவதால், நவம்பர், டிசம்பர் மாதங்களில் பொதுவாக நிகழும்.

மழை மற்றும் வெயில் பாதிப்புகளில் இருந்து நெற்பயிரை பாதுகாத்துகொள்ளலாம். இதேபோல், நவம்பர், டிசம்பர் மாதங்களில் நிலவும் பருவ சூழ்நிலைகளினால் ஏற்படும் பேக்டீரியல் இலை கருகுல் நோயின் தாக்குதலில் இருந்தும் நெற்பயிரை பாதுகாத்து கொள்ளலாம். நெல் பயிருருக்கு தண்ணீர் கிடைப்பது மிகவும் அரிதாக உள்ள சூழ்நிலையில், பாசனத்துக்கு திறந்து விடப்பட்டுள்ள தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துவது மிகவும் அவசியமாகும். குறைந்த நீரை பயன்படுத்தி நெல் சாகுபடி செய்து அதிக மகசூல் பெறுவதற்கு, திருந்திய நெல் சாகுபடி முறையை பயன்படுத்தலாம்.

இந்த முறையில், 45 சதவீதம் நீர் சேமிக்கப்படுகிறது. விவசாயிகள் நாற்று விட, விதை நெல் அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, வெள்ளை பொன்னி, பையூர்-1 ரக நெல் விதைகள் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மேலும், விதை நெல் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. நடப்பு பருவத்தில் சாகுபடி செய்யப்படும் அனைத்து பயிர்களுக்கும் தேவைப்படும் யூரியா, பொட்டாஷ், சூப்பர் பாஸ்பேட் மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்கள் அனைத்தும், தனியார் உரக்கடைகளிலும் மற்றும் அனைத்து தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களிலும் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. உரிய காலத்தில் விவசாயிகளுக்கு உரங்கள் விற்பனை செய்வதை கண்காணிக்கும் பொருட்டு, மாவட்ட அளவில் வேளாண் இணை இயக்குனர் அலுவலகத்தில் உரங்கள் கண்காணிப்பு குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

குழுவில், ஒவ்வொரு நாளும் ஒரு வேளாண் அலுவலர் கண்காணிப்பு அலுவலராக செயல்படுவார்கள். உரங்கள் விற்பனை தொடர்பான குறைகளை விவசாயிகள், 04343-237404 என்ற டெலிஃபோன் எண்ணில் தெரிவிக்கலாம். வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு தேவையை பூர்த்தி செய்ய குறைந்த அளவு விதை, குறைந்த நீர் மற்றும் குறைவான வேலை ஆட்கள் பயன்படுத்தி நெல் மகசூலை அதிகரிக்கும் தொழில் நுணுக்கமே, திருந்திய நெல் சாகுபடி முறையாகும்.தற்போதைய சாகுபுடி முறையில் ஏக்கருக்கு, 20 கிலோ விதை பயன்படுத்துகிறோம். ஆனால், திருந்திய நெல் சாகுபடி முறையில் ஏக்கருக்கு, 3 கிலோ விதை போதுமானதாகும்.

விபரங்கள் அறிய அருகில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களை விவசாயிகள் அணுகலாம்.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### 2,600 டன் உரம் தஞ்சை வருகை

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2011,00:03 IST

தஞ்சாவூர்: குஜராத்தில் இருந்து தஞ்சைக்கு 2,600 டன் உரம் நேற்று வந்தடைந்தது. குஜராத் மாநிலத்தில் இருந்து கப்பல் மூலமாக தூத்துக்குடி துறைமுகத்துக்கு அனுப்பப்பட்ட கிரிப்கோ யூரியா 2,600 டன் உரங்கள், 42 ரயில் வேகன்கள் மூலம் நேற்று தஞ்சையை வந்தடைந்தது. மொத்தம் 21 ரயில் வேகன்களில் வந்த ஆயிரத்து 325 டன் உரங்கள் தஞ்சை மாவட்டத்துக்கும், மீதமுள்ள உரங்கள், திருவாரூர் மற்றும் நாகை மாவட்டத்திலும் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி மற்றும் மத்திய சேமிப்பு கிடங்குகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### விவசாயிகளிடம் ஆலோசித்து பட்ஜெட் தயாரிக்க வலியுறுத்தல்

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2011,01:35 IST

ஈரோடு: "விவசாயிகள் சங்க பிரதிநிதிகளின் கருத்துகளை கேட்டு, பட்ஜெட் தயார் செய்ய வேண்டும்' என, தமிழ்நாடு கள் இயக்கம் வலியுறுத்தியுள்ளது. தமிழ்நாடு கள் இயக்க ஆலோசனை கூட்டம் ஈரோட்டில் நடந்தது. தமிழக பட்ஜெட் தாக்கலின்போது, கள்ளுக்கு விதித்திருக்கும் தடையை நீக்குவது தொடர்பாக அறிவிக்க வேண்டும். கள் இறக்கியவர்கள் மீது பதிவான அனைத்து வழக்குகளும் தள்ளுபடி செய்ய வேண்டும். நடப்பாண்டுக்கான பட்ஜெட் தயாரிக்கும் பணி நடந்து வருகிறது. விவசாயிகள் சங்க பிரதிநிதிகளின் கருத்துகளை கேட்டு, அரசு பட்ஜெட் தயாரிக்க வேண்டும். மயில்கள் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். பனை மரங்கள் வேகமாக வெட்டப்படுகின்றன.

இதை தடுக்க கள் இறக்க அனுமதிக்க வேண்டும் என்பன உள்பட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தமிழ்நாடு விவசாயிகள் விழிப்புணர்வு இயக்க தலைவர் வேலாயுதம் தலைமை வகித்தார். தமிழ்நாடு கரும்பு உற்பத்தியாளர்கள் சம்மேளன பொருளாளர் கருப்பண்ண கவுண்டர், கள் இயக்க மாநில அமைப்பாளர் கதிரேசன், கீழ்பவானி முறை நீர் விவசாயிகள் சங்க கூட்டமைப்பு தலைவர் காசியண்ணன், தென்னிந்திய விவசாய இயக்கங்களின்

ஒருங்கிணைப்பாளர் குழு கண்ணையன், பண்ணாரி சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர்கள் சங்க செயலாளர் பாலசுப்பிரமணி உள்பட பலர் பங்கேற்றனர்.

### வேளாண்மை அலுவலர்களுக்கு புத்தூட்ட பயிற்சி

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2011,00:13 IST

தென்காசி : தென்காசி கோட்டத்திற்குட்பட்ட வேளாண்மை வட்டாரத்தை சேர்ந்த வேளாண்மை அலுவலர்களுக்கு புத்தூட்ட பயிற்சி நடந்தது. தென்காசி கோட்டத்திற்குட்பட்ட ஆலங்குளம், செங்கோட்டை, கீழப்பாவூர், தென்காசி, கடையநல்லூர், வாசுதேவநல்லூர் உள்ளிட்ட வட்டாரங்களை சேர்ந்த வேளாண்மை அலுவலர்கள், வேளாண்மை துணை அலுவலர்கள், உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு புத்தூட்ட பயிற்சி முகாம் நடந்தது. வேளாண்மை துணை இயக்குநர் அழகர்சாமி தலைமை வகித்தார். வேளாண்மை துணை அலுவலர் ஷேக்முகைதீன் வரவேற்றார். அரசின் திட்டங்கள் குறித்து நெல்லை மாவட்ட புள்ளியியல் உதவி இயக்குநர் முத்துப்பாண்டி பயிற்சி அளித்தார்.

வயல் வெளியில் களப்பணி ஆய்வு குறித்த செயல் விளக்க பயிற்சி அளிக்கப்பட்டது. 85 பேர் பயிற்சி பெற்றனர். வட்டார புள்ளியியல் ஆய்வாளர்கள் இசக்கி, ராதா, சண்முகவேல் மற்றும் சண்முகசுந்தரம் உட்பட பலர் கலந்து கொண்டனர். வாசுதேவநல்லூர் வட்டார புள்ளியியல் ஆய்வாளர் சங்கரநாராயணன் நன்றி கூறினார். ஏற்பாடுகளை செங்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் செய்திருந்தார்.

### குமரியில் பலாப்பழம் விளைச்சல் அதிகரிப்பு போதிய வருவாயின்றி விவசாயிகள் தவிப்பு

பதிவு செய்த நாள் : ஜூலை 02,2011,00:04 IST

மார்த்தாண்டம் : குமரி மாவட்டத்தில் பலாப்பழம் விளைச்சல் அதிகரித்து வரும் நிலையில் போதிய வருவாய் இல்லாமல் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் விவசாயம் அதிகமாக நடந்து வருகிறது. இதற்கு அடுத்ததாக தென்னை விவசாயம் அதிகமாக உள்ளது. தோட்டங்கள் இடைப்பட்ட பகுதியில் பலாமரங்கள் அதிகமாக வளர்க்கப்பட்டு வருகிறது. வீடுகள் கட்டும் போது கட்டளை, ஜன்னல் போன்ற பர்னீச்சர்களுக்கு பலாமரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. குமரி மாவட்டத்தை பொறுத்தவரையில் பலாமரங்களில் இந்த ஆண்டு விளைச்சல் அதிகரித்துள்ளது. மரங்களில் காய்கள் காய்த்து குலுங்குகிறது. வருக்கை

பலாப்பழங்களுக்கு மக்கள் மத்தியில் அதிகமான மோகம் இருந்தாலும், போதுமான வருவாய் கிடைப்பதில்லை. ஒரு வருக்கை பலாப்பழம் 30 முதல் 70 ரூபாய் வரை விற்பனையாகிறது.

கூழன் பலாப்பழங்களுக்கு தேவை குறைவு மற்றும் விலை குறைவால் பறிக்கப்படாமல் பழுத்து அழுகி விழும் பரிதாபமான நிலை தொடர்கிறது. கேரள வியாபாரிகள் சிலர் பலாக்காய்களை சிப்ஸ் தயாரிப்பதற்காக வாங்கி சென்றாலும், சில தோட்டங்களில் பறிக்காமல் அழுகி விழுவதை காணமுடிகிறது. இதைப்போல் பலா மரங்களில் ஏறி பறிப்பதற்கு தொழிலாளர்கள் தட்டுப்பாடு என்ற குறைபாடும் உள்ளது. கடந்த ஆண்டு போதுமான மழை பெய்ததால் அனைத்து தோட்டங்களிலும் பலாப்பழம் காய்த்து குலுங்குவது கண்கொள்ள காட்சியாக உள்ளது. விலை குறைவால் கூழன் பலாப்பழத்தை தொடர்ந்து வருக்கை பலாப்பழமும் தோட்டங்களில் அழுகி விழும் நிலை காணப்படுகிறது. இதனால் பலாப்பழத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பலாப்பழ வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**வாடும் பயிரால் வாடும் விவசாயிகள்:10 நாளாக தொடர் மின் தடை**

பதிவு செய்த நாள் : ஜூலை 01,2011,21:38 IST

அன்னூர் : பொன்னேகவுண்டன்புதூரில் 10 நாட்களாக விவசாய மின் சப்ளை இல்லாததால், தண்ணீர் பாய்ச்சாமல் பயிர்கள் கருகுகின்றன. பொன்னேகவுண்டன்புதூர் பகுதியில் 500க்கும் மேற்பட்ட வீடுகள், தோட் டங்கள், மில்களுக்கு மின் வினியோகம் செய்யப்படுகிறது. 10 நாட்களுக்கு முன் இங்குள்ள டிரான்ஸ்பார்மரில் பழுது ஏற்பட்டது. இதனால், மின்சப்ளை பாதிக்கப்பட்டது. கிராமமே இருளில் மூழ்கியது. மின்வாரிய அதிகாரிகள் உடனே மாற்று ஏற்பாடு செய்து வீடுகளுக்கு மின் சப்ளை செய்தனர். ஆனால், தோட்டங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு மின் வினியோகம் செய்யப்படவில்லை.பி.ஜி.புதூர் விவசாயிகள் கூறுகையில், "டிரான்ஸ் பார்மர் பழுதாகி 10 நாட்கள் ஆகி விட்டன. மின்வாரியம் இதுவரை சரி செய்யாததால், தோட்டங்களில் பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை. மஞ்சள், வாழை, பருத்தி, கரும்பு உள்ளிட்ட பயிர்கள் தண்ணீர் இல்லாமல் வறண்டு விட்டன. மின்வாரியத்தில் பல முறை தொடர்பு கொண்டும் இதுவரை டிரான்ஸ்பார்மர் சரி செய்யவும், மின்சாரம் சப்ளை செய்யவும் நடவடிக்கை எடுக்கவில்லை' என்றனர்.

**தேங்காய் விலை வீழ்ச்சி: விவசாயிகள் அதிர்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜூலை 01,2011,22:45 IST

கீழக்கரை : தமிழகத்தில் தேங்காய் விளைச்சல் அதிகரிப்பு காரணமாக கடந்த இரண்டு நாளில் டன்னுக்கு 4,000 ரூபாய் சரிவு ஏற்பட்டது. இதனால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். வெளிநாட்டிலிருந்து பாமாயில் இறக்குமதி செய்ததால் சில மாதங்களுக்கு முன்பு வரை தமிழக தென்னை விவசாயிகள், போதிய விலை கிடைக்காமல் பாதிக்கப்பட்டனர். இந்நிலையில் பாமாயில் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டது.சில மாதங்களாக தேங்காய் விலையில் உயர்ந்தது. விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். கடந்த வாரம் வரை தேங்காய் கிலோ 17 க்கு விற்று வந்தனர். கடந்த இரண்டு நாட்களாக விலையில் திடீர் சரிவு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக தற்போது மொத்த வியாபாரிகள் கிலோ ரூ.13 க்கு கொள்முதல் செய்கின்றனர். டன்னுக்கு 4,000 ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இருப்பினும் சில்லறை விற்பனையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

பெரியபட்டினம் தென்னை விவசாயி அப்துல் மாலிக் கூறியதாவது; ஐந்து ஆண்டுகளாக தேங்காய்க்கு விலை கிடைக்காமல் ஏராளமான விவசாயிகள் நஷ்டமடைந்தனர். தோப்புகளை விற்பனை செய்து விட்டு மாற்று தொழிலுக்கு சென்று விட்டனர். சில மாதங்களாக நல்ல விலை கிடைத்து வந்த நிலையில் தற்போது மீண்டும் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. தடை செய்யப்பட்ட பாமாயில் தற்போது மீண்டும் இறக்குமதி செய்யப்படுவதாலும், தமிழகத்தில் நடப்பாண்டில் தேங்காய் விளைச்சல் அதிகரிப்பு காரணமாகவும் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. கொப்பரை 67லிருந்து 53 ரூபாயாக குறைந்துள்ளது. மேலும் விலை சரிய வாய்ப்புள்ளது, என்றார்.

**வர்ஷ பீமா காப்பீடு திட்டம் 13,057விவசாயிக்கு ரூ.1.66 கோடி**

பதிவு செய்த நாள் : ஜூலை 01,2011,22:52 IST

சிவகங்கை : ""வர்ஷ பீமா பயிர் காப்பீடு திட்டத்தில் சிவகங்கை, ராமநாதபுரம் உள்ளிட்ட 5 மாவட்டங்களில் 13,057 விவசாயிகளுக்கு 1.66 கோடி ரூபாய் நஷ்டஈடு வழங்கப்பட்டு வருவதாக,'' விவசாய காப்பீடு நிறுவன மண்டல மேலாளர் அன்பரசு தெரிவித்தார்.
அவரது அறிக்கை: ""2010ம் ஆண்டு மழைக்காப்பீடு திட்டமான சம்பா நெல் வர்ஷ பீமா பயிர் மழைக்காப்பீடு திட்டம், மத்திய அரசின் இந்திய விவசாய காப்பீடு நிறுவனம் சார்பில் 9 மாவட்டங்களில் அமலானது. மழையின் அளவை பொருத்து விதை, வளர்ச்சி, முதிர்ச்சி, அறுவடை பருவ காலங்களில் பயிரின் தன்மைக்கேற்ப இழப்பீடு தயாரிக்கப்படுகிறது. கடந்த 15 ஆண்டு

மழை விகிதத்தை பொருத்து, வட்டாரத்திற்கேற்ப இழப்பீடு வடிவமைத்துள்ளனர். விதிமுறைப்படி மாநிலத்தில் கடலூர், நாகபட்டிணம், ராமநாதபுரம், சிவகங்கை, திருவாரூர் மாவட்டங்களை சேர்ந்த 13 ஆயிரத்து 57 விவசாயிகளுக்கு 1.66 கோடி ரூபாய் நஷ்ட ஈட்டுத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதில், தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகளுக்கு விதிப்படி நஷ்ட ஈடு ஏதும் இல்லை," என தெரிவித்தார்.

**விவசாயிகளுக்கு நேரடியாக ஆலோசனை வழங்க "கேமராவுடன் கம்ப்யூட்டர்' வசதி**

பதிவு செய்த நாள் : ஜூலை 01,2011,22:52 IST

சிவகங்கை : மாநிலத்தில் சிறு, குறு விவசாயிகளுக்கு நேரடியாக விவசாயம் சார்ந்த ஆலோசனை வழங்க, விவசாய அலுவலர்களுக்கு "கேமராவுடன் கூடிய மினி கம்ப்யூட்டர்' வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. தமிழகத்தின் உணவு உற்பத்தி 65 லட்சம் டன்னாக உள்ளது. இதை இரு மடங்காக அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளது. விவசாய வளர்ச்சியை 2ல் இருந்து 9 சதவீதமாக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. 75 லட்சம் சிறு, குறு விவசாயிகளின் ஆண்டு வருமானத்தை இரட்டிப்பாக்க பண்ணை அளவு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதில், சொட்டு நீர் பாசனம், புஞ்சை சாகுபடி மேம்பாடு, தரமான உணவு உற்பத்தியை மேற்கொள்ள விவசாயிகளுக்கு தேவையான ஆலோசனைகளை விவசாயிகள் தங்கி உள்ள இடத்திற்கே சென்று வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

புதிய திட்டம்: மாநில அளவில் ஒன்றிய வாரியாக உள்ள விவசாய அலுவலர்களுக்கு "கேமராவுடன் கூடிய மினி கம்ப்யூட்டர்' வழங்கப்பட உள்ளது. விவசாயிகளின் நில விபரம், பயிரிட்டுள்ள பயிர்கள் குறித்த விவரங்களை அலுவலர்கள் கம்ப்யூட்டரில் வைத்திருப்பர். அவ்வப்போது, அலுவலர்களே விவசாயிகளை நேரடியாக சந்தித்து விவசாயம் சார்ந்த சந்தேகங்களுக்கு, விவசாய பல்கலை.,யில் உள்ள தொழில்நுட்ப விஞ்ஞானிகளிடம் நேரடியாக பேச வைத்து, ஆலோசனைகளை பெறச்செய்வது, அலுவலர்களின் பணியாகும்.

விவசாயத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், "ஜெயலலிதா தலைமையிலான அரசு, இதை முன்னோடி திட்டமாக செயல்படுத்துகிறது. கரூர், திருச்சி மாவட்ட விவசாய அலுவலர்களுக்கு பரிட்சார்த்தமாக "கேமராவுடன் கூடிய மினி கம்ப்யூட்டர்' வழங்கப்படும். படிப்படியாக அனைத்து மாவட்டங்களுக்கும் இந்த திட்டம் விரிவுபடுத்தப்படும்," என்றார்.

## குன்னூர் கூட்டுறவு ஏலத்தில் 70 சதவீத தேயிலை தூள் விற்பனை

குன்னூர், ஜுலை.2–

குன்னூர் கூட்டுறவு தேயிலை ஏலத்தில் 70 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.

14 கூட்டுறவு தொழிற்சாலைகள்

நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலை விவசாயி களுக்காக 14 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இந்த கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளில் உற்பத்தி செய் யப்படும் தேயிலை தூள் குன்னூர் இன்கோசர்வ் வளாகத்தில் உள்ள டீசர்வ் ஏல மையத்தில் ஏலம் நடத் தப்பட்டு விற்பனை செய்யப் பட்டு வருகிறது. விற்பனை எண் 26–க்கான தேயிலை ஏலம் கடந்த 29–ந் தேதி புதன்கிழமை நடை பெற்றது. ஏலத்திற்கு மொத்தம் 4 லட்சத்து 23 ஆயிரத்து 928 கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 2 லட்சத்து 23 ஆயிரத்து 19 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 2 லட்சத்து 9 ஆயிரத்து 9 கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.

கிராக்கி

ஏலத்தில் கடந்த 3 வாரங் களை போலவே தேயிலை தூளுக்கு கிராக்கி இருந்தது. உள்நாட்டு வர்த்தகம் களை கட்டி இருந்தது. வெளி நாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பும் அதிகளவில் இருந்தது.

கடந்த வாரத்தை போன்றே தேயிலை தூள் ரகங்களுக்கு 3 ரூபாய் விலை உயர்வு இருந்தது. ஏலத்தில் 70 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. சராசரி விலையாக இலை ரகத்தின் சாதாரண வகை 40 ரூபாயில் இருந்து 45 ரூபாய் வரையிலும் விலை உயர்ந்த தேயிலை தூள் 54 ரூபாயில் இருந்து 58 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றன.

அடுத்த ஏலம்

டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை 45 ரூபாயில் இருந்து 50 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 58 ரூபாயில் இருந்து 63 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.விற்பனை எண் 27–க்கான ஏலம் வருகிற 6–ந் தேதி நடக்கிறது.

தற்போது பச்சை தேயிலை யின் மகசூல் அதிகரித்து உள்ளது. இதன் காரணமாக

*தேயிலை உற்பத்தியும் அதி களவு உள்ளது. இதனால் ஏலத்தில் 30 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்து இருந்ததாக தேயிலை வர்த்தகர்கள் கூறினர்.*

## முட்டைகோஸ் விலை கடும் வீழ்ச்சி:

# அறுவடை செய்யாமல் தோட்டத்தில் உரமாகும் அவலம்

### விவசாயிகள் கண்ணீர்

கோத்தகிரி, ஜூலை.2-

முட்டைகோஸ் விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளதால், அவைகள் அறுவடை செய்யப்படாமல் உள்ளது. இதனால் நிலத்தில் உரமாகி வருகிறது.

**கிராமங்கள்**

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி சுற்று வட்டாரத்தில் மிளிதேன், இந்திரா நகர், எரிசபெட்டா, கேர் கம்பை, வ.உ.சி. நகர், காவி லோரை, நெடுகுளா, குருகத்தி, நெடுகுளா, சுண்டட்டி, கொட்டநள்ளி,ஈளாடா,கதவுத்தொரை, பட்டக்கொரை, சுக்கல், பொன்நகர், சுக்கல்தொரை ஷெட் உள்பட பல்வேறு கிராமங்கள் உள்ளன.

இந்த கிராமங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் மலை தோட்ட காய்கறி பயிர்களான முட்டைகோஸ், கேரட், பீன்ஸ், முள்ளங்கி, பீட் ரூட், காலிபிளவர், டபுள் பீன்ஸ், பட்டாணி உள்பட பல்வேறு சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

**விலை கிடைப்பது இல்லை**

ஆண்டுதோறும் ஒவ்வொரு விவசாய விளை பொருட்களுக்கு கட்டுபடியான விலைகள் கிடைப்பதில்லை. தற்போது கோத்தகிரி சுற்று வட்டார பகுதிகளில் சுமார் 80 சதவீதத்திற்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் முட்டைகோஸ் பயிரிடப்பட்டு அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது.

ஆனால் அசல் விலை கூட கிடைக்காததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். எனவே முட்டைகோஸ் களை அறுவடை செய்யாமல் தோட்டத்திலேயே அழுகி மண்ணிற்கு உரமாக்கும் பரிதாப நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

**ரூ.75 ஆயிரம்**

இது குறித்து மிளிதேன் பகுதியை சேர்ந்த விவசாயிகள் டேவிட் ராஜூ, ரவிச்சந்திரன் ஆகியோர் கூறியதாவது:-

கேர்கம்பை பகுதியில் சுமார் 30 முட்டைகோஸ்கள் பயிரிட்டு அறுவடைக்கு தயாராக உள்ளது. ஒரு முட்டைகோஸின் சராசரி உற்பத்தி செலவு ரூ.2.50 ஆகிறது. இதனை உற்பத்தி சுமார் ரூ.75 ஆயிரம் வரை செலவாகிறது.

மேட்டுப் பாளையம் காய்கறி மண்டிக்கு 10 டன் கோஸ் (6 ஆயிரம் கிலோ) கொண்டு செல்ல லாரி வாடகை ரூ.3 ஆயிரத்து 500 ஆகிறது. 1 லோடு கோஸை லாரியில் ஏற்ற 20 கூலியாட்களுக்கு கூலி ரூ.7 ஆயிரம் ஆகிறது.

மேலும் ஒரு லோடு முட்டைகோஸிற்கு 200 சாக்கு பைகள் வாங்கிட ரூ.2 ஆயிரத்து 100 செலவாகிறது. அதனை தொடர்ந்து மேட்டுப் பாளையம் மண்டியில் விற்பனைக்கு கொண்டு செல்லும் கோஸை இறக்கிட இறக்குகூலி ரூ.2 ஆயிரத்து 200 செலவாகிறது. மண்டி கமிஷனாக விற்பனையாகும் மொத்த தொகையில் 10 சதவீதம் பிடித்தம் செய்யப்படுகிறது.

**மண்ணுக்கு உரமாகிறது**

இவ்வளவு செலவுகளை தாக்குபிடித்தாலும் 1 கிலோ கோஸ் ரூ.1 முதல் ரூ.2 மட்டும் தான் கிடைக்கிறது. விவசாய நிலத்தில் இருந்து விற்பனை செய்யும் வரை ஒரு லோடு (200 மூடைகள்) முட்டை கோஸிற்கு அதிகபட்சம் ரூ.2 ஆயிரம் முதல் ரூ.4 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்படுகிறது.

இதனால் முட்டைகோஸ்களை அறுவடை செய்யாமல் தோட்டத்தில் அப்படியே விடப்பட்டுள்ளது. அது மக்கி மண்ணுக்கு உரமாகும் நிலையில் உள்ளது. எனவே தமிழக அரசு விவசாயிகளை காப்பாற்றிடவும், விவசாய விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைத்திடவும் நம்பக தன்மையான ஒரு நிலையை ஏற்படுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.



கோத்தகிரி அருகே ஒரு தோட்டத்தில் அறுவடை செய்ய முடியாத நிலையில் உள்ள முட்டைகோஸ்களை சோகமாக பார்வையிடும் விவசாயிகள்.